# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


## தரம் 5 புலமை பரிசில் பரீட்சை தொடர்பில் விசேட அறிவிப்பு

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நேற்று (11) நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை செய்ததாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தடையை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இம்முறை பரீட்சை 2,888 நிலையங்களில் நடைபெறவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அவுஸ்திரேலியா மற்றும் தென் ஆபிரிக்கா இன்று பலப்பரீட்சை



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் Pat Cummins தலைமையிலான அவுஸ்திரேலியா அணி, Temba Bavuma தலைமையிலான தென் ஆபிரிக்கா அணியை எதிர்த்து இன்று (12) எதிர்கொள்ளவுள்ளது. இந்த போட்டி லக்னோ மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

உலகக்கிண்ண முதலாவது போட்டியில் இந்தியாவிடம் அவுஸ்திரேலியா போராடி தோற்றது. இதனை அடுத்து இந்த போட்டியில் வெற்றி பெறும் நோக்குடன் களமிறங்குகிறது அவுஸ்திரேலியா அணி. அத்துடன் தென் ஆபிரிக்கா இலங்கை அணியுடனான தனது முதலாவது வெற்றியினை தொடர்ந்து இன்று அவுஸ்திரேலியாவுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகம்



அண்மையில் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்ட காலி மற்றும் மாத்தறை மாவட்ட மக்களுக்கு பதினைந்தாயிரம் (15,000) குடிநீர் போத்தல்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வு கொழும்பில் உள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திலுள்ள இராஜாங்க அமைச்சில் 10 ஆம் திகதி இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள கிணறுகள் மற்றும் நீர் வழங்கல் சபையின் குடிநீர் வளங்கள் கடுமையாக மாசுபட்டுள்ளதால், தற்போது காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பல பகுதிகள் கடுமையான குடிநீர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, மக்களின் குடிநீர் தேவைக்கு உடனடி நிவாரணமாக இலங்கை செஞ்சிலுவை சங்கம் இந்த தண்ணீர் போத்தல்களை வழங்கியுள்ளது என இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஜகத் அபயசிங்க தெரிவித்தார். வெள்ளம் காரணமாக வீடுகள், விவசாய நிலங்கள் உள்ளிட்ட சொத்துக்களுக்குப் பரவலான சேதம் ஏற்பட்டுள்ளதாலும், இப்பகுதிகளில் கல்வி மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டதாலும் இம்மக்களின் அன்றாட வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதற்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் (ICRC) உதவியையும் பெற்றுக்கொள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் தென்னகோன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கலாநிதி அமில கங்காணமகே மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மேலதிகச் செயலாளர் கே.ஜி.தர்மதிலக ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இஸ்ரேல் ராணுவம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை



இஸ்ரேல் - ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு இடையிலாக நடந்து வரும் போர் 5 ஆவது நாளை எட்டியுள்ளது. இந்நிலையில் காசா மீதான வான்வழித் தாக்குதலுடன் தரைவழி தாக்குதலையும் அதிகரிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.

இஸ்ரேல் ராணுவம் அதிகமான ராணுவ துருப்புகளை தெற்கு இஸ்ரேல் பகுதியில் நிலை நிறுத்தியுள்ளது. கனரக ராணுவத் தளபாடங்களுடன் ரிசர்வ் படைகளும் அழைக்கப்பட்டுள்ளன. ஹமாஸ் பயங்கரவாதிகள் தாக்குதலைத் தொடங்கியதில் இருந்து பல கொலைகள் நிகழ்ந்த காசா எல்லைப் பகுதிகளின் கட்டுப்பாட்டை மீட்டுவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

அங்கு பல பகுதிகள் மற்றும் வீதிகளின் பாதுகாப்பை இஸ்ரேல் ராணுவம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதேபோல, அமெரிக்காவில் இருந்து அதிநவீன ஆயுதங்களுடன் வந்த முதல் விமானம் இஸ்ரேலின் நேவடிம் விமான நிலையத்தில் இறங்கியுள்ளதை அந்நாட்டு ராணுவம் உறுதி செய்தது. இந்த ஆயுதங்கள் ஒரு குறிப்பிடத்தகுந்த தாக்குதல் மற்றும் கூடுதல் பலத்தினை உருவாக்க பயன்படுத்தப்படும் என்றும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதனிடையே இஸ்ரேல் குண்டு வீச்சில் ஐ.நா. ஊழியர்கள் 9 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்த சூழலில் இஸ்ரேலில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு, எதிர்க்கட்சித்தலைவர் பென்னி இடையேயான பேச்சுவார்த்தைக்குப்பின் இந்த அறிவிப்பு வெளியானது. அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து போர் மேலாண்மை அமைச்சரவை அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் லெபனானில் இருந்து இஸ்ரேலிய வான்வெளிக்குள் ஊடுருவியதாக சந்தேகிக்கப்படும் தகவல்கள் கிடைத்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து வடக்கு நகரமான மாலோட் - தர்ஷிகாவில் வசிக்கும் பொதுமக்கள் வீட்டிலேயே இருக்குமாறும், கதவுகளைப் பூட்டிக்கொள்ளுமாறும், ஊடுருவல் சாத்தியம் குறித்து எச்சரிக்கும்படியும் இஸ்ரேலிய முகப்புக் கட்டளை தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வடக்கு இஸ்ரேலில் சைரன்கள் தொடர்ந்து ஒலி எழுப்பி வருகின்றன. உயிரிழப்புகள் பற்றிய உறுதியான அறிக்கைகள் எதுவும் வெளியாகவில்லை."

## பாராளுமன்ற உறுப்பினராக அலி சாஹிர் மௌலானா தெரிவு



அலி சாஹிர் மௌலானா பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதன்படி, நஸீர் அஹமட்டினால் வெற்றிடமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அலி சாஹிர் மௌலானா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் நசீர் அஹமட்டை கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் எடுத்த தீர்மானம் செல்லுபடியாகும் என உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அரசின் 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்து



இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் மலையகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று (11) ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது. இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், நேற்று (11) முக்கிய சந்திப்புகளில் ஈடுபட்டதுடன், ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் ஆரம்பமாகவே 10 ஆயிரம் வீட்டு திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும்தோட்ட உட்கட்டமைப்புவசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் இலங்கை சார்பில் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்தியா சார்பில் கையொப்பமிட்டார்.

அத்துடன், இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள 126 வீடுகள், நிகழ்நிலை ஊடாக திறந்து வைக்கப்பட்டு, பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பதுளை, மாத்தளை மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலேயே மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இந்திய அரசால் மலையகத்தில் ஏற்கனவே 4 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பாரத பிரதமர் மோடி, மலையகம் வந்திருந்தவேளை 10 ஆயிரம் வீடுகளுக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டது. முன்னர் வீடொன்றுக்கு 10 இலட்சம் ரூபா உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் வீடொன்றுக்கு 28 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# அரச விருது வழங்கும் விழா

கலைத்துறையின் மேம்பாட்டிற்காக உன்னதமான சேவையாற்றிய கலைஞர்களை கௌரவிப்பதற்கான கலாபூஷணம் அரச விருது வழங்கல் விழா 2022 ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நேற்று (11) மஹரகம இளைஞர் சேவை மன்றத்தில் நடைபெற்றது. புத்த சாசன, சமய மற்றும் கலாசார அமைச்சினால் 38 ஆவது தடவையாக இந்த விருது வழங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நாட்டின் கலைஞர் ஒருவருக்கு கிடைக்கும் உயரிய விருதான கலாபூஷணம் இம்முறை நாடளாவிய ரீதியிலுள்ள 200 கலைஞர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த ஆரம்ப விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால், விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட கலைஞர்களுக்கு கலாபூஷணம் நாமம், விருது, சான்றிதழ் ஆகியவற்றுடன் 50,000 ரூபாய் பணப் பரிசும் வழங்கப்பட்டது.

இதன்போது கலாசார அலுவல்கள் பணிப்பாளர் யசிந்த குணவர்தனவினால் ஜனாதிபதிக்கு வரவேற்பளிக்கப்பட்டதோடு, நினைவு பரிசும் வழங்கப்பட்டது. விருது வழங்கும் நிகழ்வின் ஆரம்பத்தில் ஜெக்சன் அன்டனி உள்ளிட்ட உயிர்நீத்த கலைஞர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வண. ரம்புக்கன சித்தார்த்த தேரர் தலைமையிலான மகாசங்கத்தினர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, சீ.பி.ரத்நாயக்க, பேராசிரியர் திஸ்ஸ விதாரன உள்ளிட்டவர்களுடன், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, பேராசிரியர் ஜே.பீ.திசாநாயக்க, மற்றும் விருத்துக்காக பரிந்துரைக்கப்பட்ட கலைஞர்கள் உள்ளிட்ட ஏராளமான கலைஞர்களும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.



# ஆப்கானை வீழ்த்தி வெற்றி பெற்ற இந்தியா




2023 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற மற்றுமொரு போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அணி வெற்றி பெற்றுள்ளது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 08 விக்கெட் இழப்புக்கு 272 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பில் அணித்தலைவர் Hashmatullah Shahidi 80 ஓட்டங்களையும் Azmatullah Omarzai 62 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் Jasprit Bumrah 4 விக்கெட்டுக்களையும், Hardik Pandya 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். அதன்படி, 273 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 35 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்திய அணி சார்பில் அணித்தலைவர் ரோஹித் சர்மா 131 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். மேலும், இன்றைய ஆட்டத்தின் போது ரோஹித் சர்மா இரண்டு உலக சாதனைகளை முறியடித்திருந்தார். உலகக்கிண்ணத் தொடரில் அதிவேகமாக சதம் அடித்த வீரர் என்ற சாதனையும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஆறு ஓட்டங்களை பெற்ற வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்திருந்தார். இதேவேளை, விராட் கோஹ்லி ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களையும் இஷான் கிஷான் 47 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

# கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரிக்கு விஜயம். இரண்டு மில்லியன் ரூபாய் நிதியும் ஒதுக்கீடு



மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம்.ஐ.எம்.வலீதின் அழைப்பிற்கிணங்க கல்முனை கல்வி வலய மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரிக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க குறுகிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாடசாலை முகாமைத்துவ சபையுடன் கலந்துரையாடினார்.

மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம்.ஐ.எம்.வலீத் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக, மாகாண கல்வித் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற குறித்த நிதி தொடர்பிலான ஆவணங்கள் பாடசாலை முகாமைத்துவத்தினரின் முன்னிலையில் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க அவர்களினால் பாடசாலை அதிபர் ஐ.உவைத்துல்லாவிடம் பாடசாலையில் வைத்து கையளிக்கப்பட்டது.

மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரி அதிபரின் வேண்டுகோளின் பேரில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் அவர்களின் சிபாரிசின் அடிப்படையிலும் பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம்.ஐ.எம். வலீத் முன்னெடுத்த இந்த நிதி பெறுகை மூலம் பாடசாலையில் அவசரமாக திருத்தவேண்டியும், புனரமைக்க வேண்டியும் இருந்த கட்டிடங்கள் சீரமைக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டது.

பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து பாடசாலையின் குறைநிறைகளையும், கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்களையும், அடைவுமட்ட உயர்வுக்கான வழிவகைகளையும், பௌதீக தேவைகள் தொடர்பிலும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜி. திஸாநாயக்க பாடசாலை முகாமைத்துவத்தினருடன் விரிவாக கலந்துரையாடினார். உயர்தரப் பிரிவிற்கான ஆசிரிய ஆளணி மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்ட கல்வி அமைச்சின் செயலாளர் அவர்கள், கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளருடன் கலந்துரையாடி உள்ளகரீதியாக ஆசிரிய சமப்படுத்துகையினை மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார்.

இவ்வேளையில் குறித்த நிதி கிடைக்க காரணமாக இருந்த பழைய மாணவர் சங்க பொருளாளரும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம்.ஐ.எம்.வலீத், வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ், கல்வி மாவட்ட பொறியலாளர் ஏ.எம். சாஹீர், மாகாண கல்வித்திணைக்கள பிரதம கணக்காளர் ஏ.எம்.றபீக், கிழக்கு மாகாண முன்னாள் கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க உட்பட பலருக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்தது. இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர் ரி.எம்.றிஹான் மற்றும் கல்லூரியின் பிரதி அதிபர்கள் உள்ளிட்ட முகாமைத்துவ சபை உறுபினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(நூருல் ஹுதா உமர்)